- உணவுப் பொருட்களை பிளாஸ்டிக் அல்லாத வாழையிலை போன்றவற்றில் கட்டித் தருமாறு கோரலாம்.
- நெகிழி உறிஞ்சிகள் தவிர்த்து குவளையில் குடித்தல்
- கடைக்கு செல்ல மறுசுழற்சி செய்யும் நெகிழிபை (அ) துணிப்பை உபயோகித்தல்
- பிளாஸ்டிக் குவளையில் உள்ளதை தவிர்த்து அட்டைகளில் வாங்கி நிரப்பி வைக்கலாம்
- வீட்டில் பிளாஸ்டிக் உபயோகத்தை குறைக்கவும்
- குழந்தைகட்கு மறுசுழற்சி செய்யக்கூடிய துணி நாப்கின் பயன்படுத்தலாம்
- மதிய உணவு உலோக அடைப்பில் எடுத்து செல்லலாம்
- சவரம் செய்யும் கருவியில் பிளாஸ்டிக் தவிர்க்கவும்
- அழகுசாதனம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களில் - நுண் நெகிழிகள் தவிர்க்க வேண்டும்.

Contact


The Director
ICAR- CIFT, Matsyapuri P.O, Willingdon island, Cochin-682029
Phone 914842412300
Aris.cift@gmail.com;
cift@ciftmail.org
Website ; www.cift.res.in


Prepared by


Dr.M.M.Prasad , Principal scientist and head, MFB division
T.Muthulakshmi, Scientist
Ezhil nilavan, S., Scientist




# நெகிழிகளும் சுற்றுச் சூழலும்

ICAR -CIFT MFB DIVISION

In connection with “**Swachhtha hi seva”** September 2019

## நெகிழிகளும் சுற்றுச் சூழலும்

நெகிழி (பிளாஸிடிக்) நம்வாழ்வில் இன்றியமையாது கலந்துவிட்டது. பத்து இருபது வருடங்களுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் பிளாஸ்டிக்கின் பயன்பாடு நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. ஒருநாளுக்கு இந்தியாவில் 26000 டன் பிளாஸ்டிக் குப்பைகள் உருவாக்கப்படுகின்றன. இது 9000 யானைகளின் அளவுக்கு சமம். இதில் டெல்லி, மும்பை, சென்னை, பெங்களுர் மற்றும் கல்கத்தா போன்ற நகரங்களில் மட்டும் 1.்.6 பங்கு நாட்டின் பிளாஸ்டிக் குப்பை உருவாக்கப்படுகின்றது.

**இந்த பிளாஸ்டிக் எப்படி உண்டாக்கப்படுகின்றது?**

அங்கக அனங்கக பொருட்களிலிருந்து பல்படித்தாக்க முறையில் உண்டாக்கப்படுகின்றது. பெட்ரோலிய பெருட்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட எளிய பொருட்களை அதிக வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில் உட்படுத்தி பிளாஸ்டிக் உணடாக்கப்படுகின்றது.

**பிளாஸ்டிக் உபயோகிப்பதால் சூழலுக்கு ஏற்படும் தீமைகள்:-**

- மண்ணின் தரத்தை அசுத்தப்படுகின்றன.
- மண்ணில் புகும் நீரை குறைத்து நிலத்தடிநீர் மட்டத்தை குறைக்கிறது.
- பல உயிரினங்கள் அழிய காரணமாகிறது.
- பிளாஸ்டிக் எரிக்கும் போது வரும் புகையரில் காற்று மாசுபடுகிறது

**உடலுக்கு ஏற்படும் தீமைகள்**

- பிளாஸ்டிக் புகை சுவாசக் கோளாறு நுரையீரல் புற்றுநோய்க்கு காரணமாகிறது.
- பிளாஸ்டிக் கொள்கலன்களில் உணவை எடுக்கும்போது அதில் வேதிப்பொருட்கள் வெளியாகின்றது. இதனால் தடுப்பு மண்டலத்தில் சிறுநீரக பாதிப்பு, ஜிரணமண்டல பாதிப்பு இவற்றோடு புற்றுநோயும் ஏற்பட காரணமாகின்றது.
- குழந்தைகளுக்கு பிளாஸ்டிகினால் ஆட்டோஇம்யூன் என்று சொல்ல கூடிய நிணநீர் மண்டல பாதிப்பை ஏற்படுத்தி உடல் மற்றும் மற்ற பொருட்களை அறிந்து கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தும்.

**இதனை தடுக்க என்ன செய்யலாம்?**

- பாலி எதிலீன் பாட்டில்கள் மற்றும் தண்ணீர் குளிர்பான பாட்டில்களை மறுசுழற்சி செய்ய வேண்டும்.
- மக்கும் மக்காகுப்பைகளை தனியாக பிரித்து வைக்க வேண்டும்.